<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE</u>
<u>(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.</u>

<u>DEPOSITION OF WITNESS</u>

OS.NO.76/2017 (OS.NO.75/2014)
P.W.1-VISHWANATHAN, S/O.SUBRAMANI
DATE:16.09.2022

<u>வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் 2, 3 மற்றும் 9 தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

முதல் பிரதிவாதி சுப்பிரமணி என் தகப்பனார் என்றால் சரிதான். 2ஆம் பிரதிவாதி ஜெகதாம்பாள் என்னுடைய அம்மா என்றால் சரிதான்.என் அப்பா அம்மாவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 4 பிள்ளைகள், 2 மகன்கள், 2 மகள்கள். 2 மகன்களில் நான் ஒருவர் மற்றொருவர் 3ஆம் பிரதிவாதி என்றால் சரிதான். 2 மகள்கள் அவர்கள் இவ்வழக்கில் 4வது பிரதிவாதி மற்றும் 9ஆம் பிரதிவாதி என்றால் சரிதான். சித்ராவை இவ்வழக்கு தாக்கல் செய்தபோது தரப்பினராக சேர்க்கவில்லை என்றாலும் 2019ல் தான் இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்தேன் என்றாலும் சரிதான். என் தகப்பனாருடன் பிறந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர் என்றால் 4 பேர்கள். யார் யார் என்றால் என் தகப்பனார் சுப்பிரமணி, 2வது என் சித்தப்பா ராமஜெயம், 3வது நடராஜன், 4வது உலகநாதன். அந்த 4 நபர்களில் 3 பேர் ராணுவத்தில் உள்ளார்கள் என்றால் சரிதான். யார் யார் ராணுவத்தில் உள்ளார்கள் என்றால் என் தகப்பனார் சுப்பிரமணி, என்னுடைய சித்தப்பா நடராஜன், மற்றொரு சித்தப்பா உலகநாதன். தாவாவில் சொத்துக்களை எ மற்றும் பி ஷெடியூல் என்று காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். எ ஷெடியூல் சொத்தானது பாகப்பிரிவினை மூலம் என் தகப்பனாருக்கு வந்த சொத்து என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தை வா.சா.ஆ.1ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் எ செடியூல் சொத்து என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என் தாத்தா பெயர் என்னவென்றால் கோவிந்தசாமி. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் என் தாத்தா கிரையம் பெற்ற சொத்துக்களா அல்லது மூதாதையர் சொத்துக்களா என்றால் என் தாத்தா கிரையம் பெற்ற சொத்துக்கள். 05.04.1955ல் என் தாத்தா கிரையம் வாங்கியதாக ஒரு பத்திரத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பத்திரம் வா.சா.ஆ.12ஆக இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் முன்னிலைக்கு என் தகப்பனாருக்கு மொத்தம் 62 செண்ட் ஒதுக்கப்பட்டதா என்றால் ஆமாம். எ செடியூலில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது மொத்தம் 29.5 செண்ட் மட்டும் தான் என்றால் சரிதான். பி செடியூல் சொத்து என் தாயார் பெயரில் கிரையம் பெற்ற சொத்து என்றால் என் அம்மா பெயரில் கிரையமாக உள்ளது. பி

ஷெடியூல் சொத்தை 2 கிரையமாக பெற்றார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் முன்னிலைக்கு என் தாயார் 14 1/2 செண்ட் கிரையம் பெற்றுள்ளார் என்றால் என் தாயார் பெயரில் என் தகப்பனார் கிரையம் பெற்றுள்ளார். மற்றொரு 14 செண்ட் வா.சா.ஆ.6 முன்னிலைக்கு என் தாயார் கிரையம் பெற்றார் என்றால் என் அப்பாவின் பாக சொத்தை கொடுத்து அந்த சொத்து கிரைய பெறப்பட்டது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றாலும் அந்த சொத்து 2ஆம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றாலும் சரியல்ல. என் தகப்பனார் எந்த வருடத்தில் ராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றார் என்றால் 1974ல் ஓய்வு பெற்றார். என் தகப்பனார் எந்த வருடம் இறந்தார் என்றால் 2015ல் இறந்தார். அவர் இறக்கும் வரை பென்ஷன் வாங்கி வந்தார் என்றால் சரிதான். தற்போது அந்த பென்ஷனை என் தாயார் பெற்று வருகிறார் என்றால் சரிதான்.

பிரதிவாதிகள் 2, 3 மற்றும் 9 தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞர் கோரிக்கையின் பேரில் வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டி சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு சாட்சியால் கையொப்பம் செய்யப்பட்டது.

ஓம்/-XXXXX,
(திருமதி.பி.ரேவதி),
கூடுதல் மாவட்ட நீதிபதி,
(விரைவு நீதிமன்றம்),
வேலூர்.